# அண்ணாவும் ஆங்கிலமும்!

நேற்றைய தொடர்ச்சி

**கே.**ஏ. இராமசாமி முதலியார் ஜஸ்டிஸ் (Justice) எனும் ஆங்கில இதழில் எழுதிய கட்டுரைகள் எண்ணற்ற இளைஞர்களைக் கவர்ந்தன. அதில் அண்ணாவும் ஒருவர். அண்ணாப் பிற்காலத்தில் ஜஸ்டிஸ் ஏட்டியின் துணை ஆசிரியராகவும் சில காலம் பணிபுரிந்தார். ஆங்கில ஆசிரியராக சென்னை கோவிந்தப்பன் நாயக்கன் தெருவில் உள்ள பள்ளியில் சில காலம் பணி புரிந்துள்ளார். அண்ணா அவர்களுக்கு ஆங்கிலப் படங்கள் பார்ப்பது பிடிக்கும். அண்ணா சாலையில் இருந்த எல்பின்ஸ்டோன் போன்ற திரையரங்கங்களுக்குச் சென்று அடிக்கடி நல்ல திரைக்கதை - உரையாடல் இருக்கும் படங்களைப் பார்க்கத் தவறியதில்லை.



அண்ணாமலை பல்கலைக்கழகத்தில், ஆங்கிலத்தில் உரையாற்ற அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். அவர் எப்படிப் பேசப் போகிறார் என்ற ஆர்வம் அனைவருக்கும் இருந்தது. அண்ணா பேசத் தொடங்கினார் "நான் ஆங்கிலத்தில் மிகவும் குறைவாகவே பேசுவேன்; ஆனால், என் ஆங்கிலத்தில் குறையே இருக்காது" என்று அவருக்கே உரிய நகைச்சுவையோடு ஆங்கிலத்தில் பேச்சை ஆரம்பித்தார். அரங்கமே அவருடைய கருத்துச் சுவை கேட்டுக் கர ஒலியால் அதிர்ந்தது.

சிதம்பரம் நகரில் உள்ள பள்ளியில் "இளம் உள்ளம்" எனும் தலைப்பில் அண்ணா பேசியதை அறிந்து, அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் அழைத்திருந்தனர். தமிழில் "ஆற்றங்கரையினிலே" என்ற தலைப்பில் பேசினார். தேம்ஸ் நதியில் தொடங்கி, நைல் நதி, மஞ்சள் நதி, சிந்து நதி என்று காவிரி கரை வரை, நாகரிக வரலாற்றைப் பற்றிப் பற்பல செய்திகளைச் சொல்லி முடித்தார். அவரின் சொற்பொழிவு மிகப்பெரிய தாக்கத்தை மாணவர்கள் இதயத்தில் ஏற்படுத்தியது. மாணவர்களும், ஆசிரியர்களும் ஏற்பாடு செய்திருந்த அடுத்த நாளில் ஆங்கிலத்தில் "உலகம் புதியதும், பழையதும்" எனும் தலைப்பில் தங்கு தடை இன்றி, புதுமழைத் தண்ணீராக, அற்புதமான ஆங்கில மொழியில் உரையாற்றினார். இப்படி பேசுவது கேட்ட அப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், போன்ற மாணவர் பட்டாளம் பலரும் அண்ணா மீது தீராக் காதலாகி இயக்கத்தில் சேர காரணமாயிற்று!

காரணம், அண்ணா ஆற்றிய இரு சொற்பொழிவுகளும் நெஞ்சில் நிலைத்தவை. தரப்பட்ட தலைப்பின் பொருள் சற்றும் சிதையாமல், இனிமை குன்றாமல், குறையாமல் மேற்கோள் காட்டிப் பலரும் பேசினார். பேச்சைக் கேட்ட அனைவரும் வியந்தும், மயங்கியும் போனார்கள். அண்ணாவின் மேதைத் தன்மையைப் போற்றிப் புகழ்ந்த பலரும் அவரது கொள்கையின் மீது பற்றுக் கொண்டு அவரை எதிர்கால அரசியல் தலைவராக, தங்கள் வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளக் காரணமாயிற்று!

1941 -ஆம் ஆண்டு எஸ்.ஐ.ஏ.ஏ.திடலில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் கலந்து கொண்டார் ஜனாப் முகமது அலி ஜின்னா. பெரியாரின் தமிழ்ப் பேச்சை அறிஞர் அண்ணா அருமையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதைப் பார்த்த அவர், "யார் இவர்?" என வினவி, "இவர் எதிர்காலத்தில்,மிகப் பெரிய அறிஞராகத் வருவார்; நாடு போற்றும் நல்லவராகவும் திகழ்வார் " என்று பெரியாரிடம் புகழ்ந்து கட்டியம் கூறியவராக வாழ்த்து கூறினார்!

அறிஞர் அண்ணா ஆங்கில மொழியில் "ஹோம் லேண்ட்" (Home Land) என்னும் பெயரில் ஒரு இதழைத் தொடங்கினார். 9-06-1957 அன்று தொடங்கிய அவ் இதழ் பின்னர், ஹோம் ரூல் (Home Rule) எனும் புதுப் பெயரில் மாற்றம் பெற்று வெளிவந்தது. ஹோம்லேண்ட் இதழில் அண்ணா எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் அனைத்தும் ஆரணங் கின் கழுத்தில் உள்ள அணிமணிகளாக இருந்தன. ஆங்கில அடுக்குச் சொல் மொழியில் அவர் எழுதியவை புதுமையாக - தெளிவாக உள்ளதாக இருந்ததால், இன்றைக்கும் பலரும் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர்.



**கவிஞர் தமிழ்தாசன்**
**- கழகத் தீர்மானக் குழுத் தலைவர்**

அண்ணா அவர்கள் தமிழ் மொழிப் புலமையைப் போல, ஆங்கிலத்திலும் புலமை படைத்தவர். அவர் ஒருமுறை திருச்சி நிகழ்ச்சி ஒன்றில் காலையில் தமிழில் பேசிவிட்டு, அன்று மாலையில் ஆங்கில மொழியில் உரையாற்றினார். அவரது ஆங்கில உரையைக் கேட்டவர்கள் எங்கே தமிழ் மொழியை விட்டுவிட்டு, ஆங்கிலப் பேச்சாளராக மாறி விடுவாரோ, என்று அச்சப்பட்டார்கள்.

ஆங்கில கட்டுரைகள் 158 தீட்டியும், 750-க்கும் மேற்பட்ட பல்வேறு அரங்க மேடைகளில் ஆங்கிலத்தில் உரையாற்றி அசத்தியவர் அண்ணா.

அண்ணா அவர்கள் சிறையில் இருந்த போது, வீட்டிலிருந்து கொண்டு சென்ற நூல்களையும்,சிறை நூலகத்திலும் நூல்களைத் தேடிப் படிப்பதையும் வழக்கமாக வைத்திருந்தார். அவர் படித்த தமிழ் நூல்கள் தவிர, சில ஆங்கில நூல்களான தீங்கியல் சட்டம் (Torts Law) மாமன்னரின் மருத்துவன் நினைவலைகள் (The Great King's Doctor Memory), சிந்து முதல் கங்கை வரை, சாடர்லீ சீமாட்டியின் காதலன் எனும் நாவல் (Lady Chatterley,s Lover by D .H Lawrence), புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் குறிப்பு, யூதர்களின் வரலாறு (Jewish History) ஜெயபிரகாஷ் நாராயணனின் சிறைக் குறிப்புகள், (Prison Diary of Jayaprakash Narayan), அல்லும், பகலும் (Night and Day by Virginia Woolf), உட் ஹவுஸ் - (Wood House) என்பவர் எழுதிய புத்தகம், சித்திரலேகா, மனித குலத்தின் வளர்ச்சி குறித்து ஆராய்ச்சி ஏடு (1), (2), நெவில் ஷட் (Nevil Shute) என்பார் எழுதிய நூல், இரஷ்யச் சிறுகதைத தொகுப்புகள், ஒரு கிழவியின் கதை, மற்றும் ஒரு கைதியின் கதை. அவருடைய "கைதியின் எண்: 6,342 சிறை நாள் குறிப்பில், மேற்கோள்களாகக் காட்டப்பட்ட சில ஆங்கில நூல்களாவன: அடக்குமுறையைப் பற்றியது, ஆப்பிரிக்க நாட்டு ஜூலு (Africa Country,s zulu people) மக்களைப் பற்றிய நூல், கொள்கைக்காகக் கொடுமைக்கு ஆளானவர்கள், எழுத்தாளர் பிரச்சனைகள் குறித்து இரண்டு ஆங்கில நூல்கள், எச்.ஜி. வேல்ஸ் - (H.G. Wells) எழுதிய நூல் மற்றும் கலைக்களஞ்சியம் ஆகியன.

அறிஞர் அண்ணா மொழிபெயர்த்த (தமிழில்) ஆங்கில நூல்கள் - பிற மொழி கதைகள் : 1. எலினார் ஆண்டனி கதை ( ஜெரோம் - கெஜரோம் எழுதியது), 2. உலகநாதன் கதை (ஓ ஹென்றி எழுதியது - "O" Henry), 3. ஒரு சீமான் மகன் கதை (ஓ ஹென்றி எழுதியது), 4. அம்பாள் கடாட்சம் (ஒ. ஹென்றி), 5. ஒரு கிழவியின் கதை (இரஷ்யாக் கதை, 6. ஒரு கைதியின் கதை (இரஷ்யாக் கதை), 7. ஓவியன் கதை (உட் ஹவுஸ் எழுதியது,) 8. The Man (இர்விங் வேலஸ் - Irving wallace) எழுதியது, 9. Apple Cart - (பெர்னாட்ஷாஎழுதியது). அதுமட்டுமல்லாது, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அண்ணாவின் கதை "இரங்கோன் இராதா" எனும் புதினம் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பாரிஸில் பிரெஞ்சு அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அதனைப் புதுவையைச் சேர்ந்த பிரஞ்சு மொழிப் பேராசிரியர் லினோஸ் கேடிலிஸ் (Leonce Cadelis) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அவரது எதுகை, மோனை நிறைந்த அழகு தமிழ்; அடுக்கு மொழி மேடைப்பேச்சால், கேட்போர் அனைவரையும், வேட்ப மொழிவதாம் சொல்லாடலாற் சுவையால் சுருட்டிப் போட்டவர்!தேனருவிச் சொற் கயிற்றால் அனைவரின் உள்ளங்களைக் கட்டிப் போட்டவர்; கேட்போரோ மகுடி நாதம் கேட்ட பாம்புகளாய், மது உண்ட வண்டுகளைப் போல் மயங்கிக் கிடப்பர்.

1951 டிசம்பர் 13 கழக முதலாவது மாநாடு. "அறிவகம்" தலைமையகம் கட்டடம் கட்டப் பெற்ற பின்னர், நடைபெற்ற கூட்டத்தில் "கண்ணின் மணிகளே! கழக காளைகளே! அன்புத்தம்பிகளே!" எனத் தொடங்கி, "I am the friend of the unfriended poor" என்று ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் வரிகளை எடுத்துக்காட்டி, "நண்பர்கள் அற்ற ஏழைகளுக்கு, நான் நண்பன்" என்று அண்ணா கூறியதும், கையொலி வானை பிளந்தது.

1949 செப்டம்பர் 17 இல் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் , பல்வேறு ஏடுகள் பரப்புரை சாதனங்களாக விளங்கி வந்தன. 1953 ஆம் ஆண்டு ஜூன் 15 இல் "நம் நாடு " இதழ் பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்டது. அவ் இதழின் முகப்பில், " The Official Organ of the D.P.F" என்றே அச்சிடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை "Dravidian Progressive Federation (D.P.F)" என்று சுருக்கி வெளியிட்டனர். அண்ணாவின் அரிய எண்ணத்தாலும், ஆங்கில ஏடுகள் D.M.K. என்று தொடர்ந்து எழுதி வந்ததாலும் 17.10.1960 முதல் வந்த நம் நாடு இதழில் (D.P.F.) என்பது D.M.K. என்று மாற்றம் பெற்று வரத் தொடங்கியது. அது முதல் ஏடுகள், விளம்பர எழுத்துகள், நூல்கள், பரப்புரை அலுவல் சாதனங்களில் போன்றவற்றில் ஆங்கிலத்தில் D.M.K. என்றே எழுதப்பட்டு வருகின்றது.

1962 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்த போது, சட்டமன்றத்திற்கு 78 இடங்களில் தி.மு.கழகம் போட்டியிட்டது. அதில் நின்ற கழக முன்னணித் தலைவர்கள் 50 இடங்களில் வெற்றி பெற்றிருந்தனர் என்றாலும், இரண்டாவது முறையாகக் காஞ்சிபுரம் தொகுதியில் நின்ற அண்ணா அவர்கள் தான் பெறவேண்டிய வெற்றி வாய்ப்பை இழந்திருந்தார் . அதன் காரணமாக வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற இராஜ்யசபா எனும் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டுப் பிரச்சினைகளான மொழிப் பிரச்சனை, திராவிட நாடு கோரிக்கை, தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பலப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றார். அவர் குழுத் தலைவராகத் தான் அமர்ந்து இருந்தார் எனினும், ஐந்து நிமிடம் பேச வேண்டிய அவருடைய ஆங்கில உரையைக் கேட்டு மயங்கிய இந்தியப் பிரதமர் மேலும் நீண்ட நேரம் அவையில் பேச அவர் அனுமதிக்கப்பட்டார். அவர் ஆற்றிய அருவி போலான அடுக்கு நடை ஆங்கில உரையைக் கேட்ட இந்தியப் பிரதமர் நேரு உட்பட வடநாட்டுத் தலைவர்கள் பலரும் வியந்து போயினர்.

1962 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் அன்று அறிஞர் அண்ணா நாடாளுமன்ற மேலவையில் தனது கன்னிப் பேச்சைத் தொடங்கினார். ஆங்கிலத்தில் அண்ணாவின் பேச்சு ,இந்திய மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் அற்புதமாக அமைந்திருந்தது . "தமிழ் வெறியர்கள், ஆங்கிலம் தெரியாத ஜென்மங்கள்" என்று பேசப்பட்ட கட்சித் தலைவர்களின் உரை அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சிலிர்க்க வைத்தது. கிரேக்க அறிஞர் டெமாஸ்தனிஸ், ஏதென்சின் மார்க்கஸ் அரிலியஸ், ரோமாபுரியின் சிசரோ போன்ற இன்னும் ஒரு பேச்சாளரை அவர்கள் கண்டனர். தலைநகரில் பத்திரிகைகள் அண்ணாவின் பேச்சை விரிவாக வெளியிட்டுப் பாராட்டின.

நேரு, அண்ணாவின் பேச்சாற்றலைக் கேட்டு பிரமிப்படைந்தார். அதன் பிறகு அண்ணாவிடம், கண்ணியத்துடனும், நட்புடனும் பழகத் தொடங்கினார். 'மிஸ்டர் அண்ணாதுரை' என்று அழைத்து அவரது கருத்துக்களை அறியும் வண்ணம் அவர் சொல்லாட்சியின் தோற்றப்பொலிவும் அமைந்திருந்தன.

மாநிலங்கள் அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா அவர்கள் தமிழ்நாடு, திராவிட நாடு, மொழிப் பிரச்சனை, இந்தி மொழித் திணிப்பு, அதிகாரக் குவிப்பு, மாநில சுயாட்சி, சமூக நீதி, இட ஒதுக்கீடு, தேசிய ஒருமைப்பாடு, பிரிவினைச் சட்டம், பொருளாதார கோட்பாடு, நிதிநிலை அறிக்கை, குடியரசுத் தலைவர் உரை, சீன - பாகிஸ்தான் போர் என்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு, தன் உரையில் அறிவார்ந்த பங்களிப்பைச் செய்திருக்கிறார். அவரது உரைகளில் அருமையான செய்திகளைச் செதுக்கித் தந்திருக்கிறார்.

திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு, அண்ணா பின்வாங்கி விட்டார் என்று சொன்னார்கள். " வீடு இருந்தால் தான் ஓடு மாற்றலாம்; நாடு இருந்தால்தான் கட்சி நடத்தலாம்; நாட்டுக்கே ஆபத்து என்று வந்திருக்கின்ற நிலையில், நாம் பிரிவினை பேசுவது அயலானுக்கு இடம் கொடுத்து விடுவதாகும். நாம் அப்படி நடந்து கொண்டால், வருங்கால தலமுறை நம்மை சபிக்கும் " என்று அண்ணா பசுமரத்தாணி போல் 1962 அக்டோபர் மாதம் வேலூர் சிறையில் இருந்து விடுதலை அடைந்ததும் திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டதற்கான காரணத்தை தெரிவித்தார். அண்ணாவிடம் கேள்வி கேட்ட ஆங்கில ஏடுகளுக்குப் பதில் அளித்தும், மாநிலங்களவையிலும் பேசியும் உள்ளார்.


அறிஞர் அண்ணா அவர்கள் மேலவையான இராஜ்ய சபாவில் முதன் முதலில் தனது கன்னிப் பேச்சைத் தொடங்கிட "Now I invite Mr.C.N. Annadurai to deliver his maiden speech." என அவைத் தலைவர் அழைத்தார். உடனே எழுந்து அண்ணா, தனது கரகரத்த குரலில் "Yes Chairman, I am going to deliver my maiden speech... but, it's not a maiden's speech..." என்று அண்ணா தொடங்கி அவையில், நகைச்சுவையாகக் கருத்து மலர்களைக் கோவையாக எடுத்து வைக்கத் தொடங்கி, ஆங்கிலத்தில் அசத்தினார்.

மாநிலங்களவைக்குத் தேர்வாகி அண்ணா சென்ற போது, அவரின் முதல் முழக்கம் 1962 மே ஒன்றாம் தேதி தொடங்கியது. அவரது கன்னிப் பேச்சை ஆங்கிலத்தில் கேட்டு அயர்ந்து போனார் பிரதமர் ஜவஹர்லால்நேரு பெருமானார். நேரம் கடந்ததை மாநிலங்கள் அவைத் தலைவர் சுட்டிக்காட்டிய போது, உணர்ச்சி வசப்பட்டு நேரு குறிப்பிட்டு "அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள்; பேச விடுங்கள்" என கேட்டுக் கொண்ட அதிசயம் நடந்தது. அண்ணாவின் உரை அந்த அளவுக்கு நேருவைக் கட்டிப்போட்டது. காரணம், அவரின் பேச்சுக்கு யாரும் அவ்வளவு எளிதில் மறுத்து பேசிவிட முடியாத வலுவான வாதங்கள் வைப்பதில் சமர்த்தராகத் திகழ்ந்தார்.

"நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். நான் என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்ள பெருமைப்படுகிறேன். இப்படி கூறுவதால், நான் வங்காளிக்கோ, மராட்டியனுக்கோ, குஜராத்திக்கோ எதிர்ப்பானவன் அல்ல; இராபர்ட் பர்ன்ஸ் சொன்னது போல, மனிதன் எப்படி இருந்தாலும் மனிதன் தான். நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் போது, திராவிடன் இந்த உலகத்திற்கு வழங்க திட்டவட்டமான, தெளிவான மற்றவர்களிடம் இருந்து வேறுபட்ட - சில இருக்கின்றன என்று கருதுகிறேன். அதனால், எங்களுக்குச் சுயநிர்னய உரிமை தேவை என்று விரும்புகிறோம்"

தொடர்ச்சி நாளை...

# உன் இலட்சியம் காப்போம்! அண்ணா!



புவிப்பரப்பில் சிறந்தவனே! சின்னக் காஞ்சி
  புரத்தினிலே பிறந்தவனே! தமிழாய் பொங்கிச்
செவிப்பரப்பில் புகுந்தவனே! உலக மக்கள்
  சிரம்வணங்கத் தகுந்தவனே! உரிமை வேட்கைத்
தவிப்படங்கத் "தமிழ்நாடு" பெயரைச் சூட்டித்
  தலைநிமிர வைத்தவனே! சங்க காலக்
கவிப்புலவர் வரிகளைப்போல் தமிழர் நெஞ்சில்
  கல்வெட்டாய் நிலைத்தவனே! எங்கள் அண்ணா!

மாடமணி மாளிகையின் மலர்மெத் தைமேல்
  மஞ்சம்போட் டிருந்தஅர சியலை, நித்தம்
பாடுபடும் ஏழையர்தம் குடிசைக் குள்ளும்
  பவனிவரச் செய்தவனே! பரண்மேல் வைத்த
ஏடுகளில் துயில்கொண்ட தமிழைத் தட்டி
  எழுப்பியஎம் கோமானே! எட்டுத் திக்கும்
மேடைகளில் எதிரொலித்த விடியற் பாட்டே!
  "மேதை" எனும் சொல்லுக்கோர் எடுத்துக் காட்டே!

"பங்காரு, நடராசர்" தமிழன் னைக்குப்
  படையலிட்ட அறிவமுதே! பாசத் தேனே!
பொங்கார்வத் தம்பியர்க்குக் களத்தில் கூட
  "பொறுமை"சொல்லித் தந்தவனே! மகர யாழில்
சங்கீதம் மீட்டதுபோல், சொற்பெ ருக்கில்
  சந்தமழை பொழிந்தவனே! சரித்தி ரத்தின்
சிங்காத னத்தில்எம்மை அமர வைத்துச்
  சென்றவன்நீ! ஆரியத்தை வென்ற வன்நீ!

வம்புக்கு வந்தாரைத் தன்வா தத்தால்
  வசமாக்கிப் போட்டவனே! வடஆ திக்கக்
கம்பிக்குள் சிறைப்பட்ட மொழியை, நாட்டைக்
  காப்பாற்றி மீட்டவனே! தினம்வி ழித்துத்
தம்பிக்கு நீவரைந்த கடித மெல்லாம்
  தமிழுக்குக் கருவூலம் அன்றோ! எங்கள்
நம்பிக்கைச் சூரியன்நீ உதிக்கா விட்டால்
  நாடேது? தமிழர்க்கு நாதி ஏது?

மாற்றலரை யும்கவர்ந்த மகத்து வம்நீ!
  மனிதத்தின் புனிதம்நீ! வளம்குன் றாமல்
ஊற்றெடுத்த கற்பனையின் உறைவி டம்நீ!
  உவமைகளின் கொள்ளிடம்நீ! புகழ்ப்பொன் னேட்டில்
காற்றடித்துச் சாயாத இமய மும்நீ!
  காவியம்நீ! ஓவியம்நீ! காலத் தாயின்
நோற்றவத்தால் வந்துதித்த தவம கன்நீ!
  நூற்றுக்கோர் ஊழிக்குப் பிறப்ப வன்நீ!

அண்ணா!நின் உரையில், தீ பரவச் செய்தாய்!
  ஆயினும்அத் "தீ"பிறரை எரிக்க வில்லை!
கண்ணீரில் எழுதுகோல் நனைத்தே, ஈரக்
  கதைபுனைந்தாய்! எனினும்அது கரிக்க வில்லை!
மண்மீதில் இறுதிஊர் வலம்உ னக்கு!
  மழலைகளும் அன்றைக்குச் சிரிக்க வில்லை!
விண்ணே! நீ புதைந்துவிட்டாய் எனும்துன் பத்தை
  விழுங்கிவிட்டோம்! அதுஇன்னும் செரிக்க வில்லை!

கடலலையின் தாலாட்டில், உப்புக் காற்றில்
  கண்ணுறங்கும் அண்ணா!நின் பிறந்த நாளில்,
உடன்பிறப்புக் கூட்டத்தை விழித்துப் பார்நீ!
  உணர்வலைகள் ததும்பியெழும் உற்சா கம்பார்!
அடல்மறவர்! ஆம், உன்றன் ஆசி பெற்ற
  அன்புமகன் "தளபதி" இந் நாட்டுக் காகக்
கொடைவழங்கும் உழைப்பைப்பார்! ஓய்வில் லாத
  கொள்கைநெடும் பயணத்தின் வெற்றி யைப்பார்!

நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தி ருக்கும்
  "நேற்றையநம் சுப்பனைப்பார்! குப்ப னை"ப்பார்!
சாதிமதப் பேதமின்றிச் சண்டை யின்றிச்
  "சமத்துவ புரங்கள்"எங்கும் மலர்வ தைப்பார்!
ஆதிமொழித் தமிழேஎம் உயிர் மூச் சென்றே
  அறிவித்த ஆக்கம்பார்! தொன்று தொட்ட
வேதனையின் இருளனைத்தும் விலகி, இன்று
  விவசாயி விழியில், ஒளி வெள்ளத் தைப்பார்!

ஆண்டவனுக் கருகில்போய் கருவ றைக்குள்
  அர்ச்சகராய் நிற்கும்அந்த இளைஞ னைப்பார்!
பூண்டெழுந்த சபதத்தால் சிற்றூர் தோறும்
  பொறியாளர், மருத்துவர்தம் "புதுமு கம்"பார்!
ஆண்டுதொறும், திங்கள்தொறும், கிழமை தோறும்
  அல்ல!அல்ல! நாள்தொறும்ஓர் வளர்ச்சி யைப்பார்!
மீண்டும்இந்தத் தமிழகத்தைச் சுற்றிப் பார்நீ!
  மீட்சிபெற்ற தாயகத்தின் மாட்சி யைப்பார்!

" படியரிசித் திட்டம்"என் றுரைத்தாய்! இன்று
  பசியாறி மனம்குளிரும் மக்க ளைப்பார்!
குடல்கருகும் வறுமைஎன்றாய்! அடடா, பள்ளிக்
கூடத்தில் காலைஉணவு அளிப்ப தைப்பார்!
வடபுலம்தான் வாழ்கிறதென் றுரைத்தாய்! தெற்கும்
  வளர்கிறதே! இன்றந்த வனப்பை நீ பார்!
"கடமையிலே தவறாத முதல்வர்" என்றே
  கைகூப்பி எழும், மக்கள் களிப்பி னைப்பார்!

"ஒப்பாரும் மிக்காரும் இலாத வண்ணம்
  உயர்வாய்நீ! " என்றுரைத்த உன்ன தம்பார்!
"அப்பாவைப் போலபிடி வாதக் காரன்!
  அரிமாவை நிகர்இளைஞன்! " என்றுன் நாவால்
எப்போதோ நீயுரைத்த இளைஞ னைப்பார்!
  இன்றைக்கு "மாண்புமிகு முதல்வர்" ஆகித்
தப்பாமல் தொண்டுசெய்யும் உறுதி யைப்பார்!
  " தலைவன்"என்றே நிமிர்ந்துநிற்கும் தகுதி யைப்பார்!

மடிமீதில் தூக்கிவைத்துக் கொஞ்சும் போதில்
  "வருங்காலம் உன்காலம்" எனும்நின் வாழ்த்துப்
படியேபே ராற்றலினால் ஆட்சி செய்யும்
  பக்குவம்பார்! " தளபதி"நற் பண்பி னைப்பார்!
இடிதாங்கி போல்நின்றே இயக்கம் காக்கும்
  இனமானத் தொண்டர்களின் இன்மு கம்பார்!
கொடிதாங்கி "முப்பெரும் விழாவில்" வீரர்
  கூட்டம்வந்தே "கரூர்"நோக்கிக் குவிந்தி டும்பார்!

கயலோடு, புலி,வில்லைக் கொடியில் தாங்கிக்
  "கலைஞர்" அன்று புறப்பட்ட பயணம், இன்று
செயலாக்கம் பெற்றதண்ணா! "சமூக நீதி"
  திசைதோறும் ஊடுருவும் செய்தி கேட்டே
உயிர், உள்ளம் சிலிர்த்திடநீ எம்மோ டில்லை!
  உன்மீதில் ஆணை!இதோ கலைஞர் பிள்ளை!
புயல்வேகத் "தளபதி"யின் சேனை! ஆவி
  போயினும்உன் இலட்சியத்தைக் காப்போம்! அண்ணா!

**... கவிச்சுடர். கவிதைப்பித்தன்**





பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வீரப்பன் சத்திரம் அண்ணா மன்றத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அண்ணன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினா் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக பொருளாளர் .ப.க.பழனிசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.